PROVED BY THE TEXT-BOOK COMMITTE

# THE PICTORIAL TAMIL GRAMMAR



V. S. Venkataraman & Co.

KUMBAKONAM.


1 AUG 193
MADRA
TB
P31 (3)
N131
172984

# சித்திரமுறை இலக்கணம்

## முதற் புத்தகம்

துரைத்தனத்தார் அங்கீகாரஞ் செய்தது.

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [அணா 3

DEDICATED TO THE CHILDREN of the MOTHERLAND

THE ROYAL PRINTING WORKS

MOUNT ROAD : : MADRAS.

# உபாத்தியாயர்களுக்கு

மனிதனுடைய கருத்துக்கள், முதன் முதலில், அவன் காண நேர்ந்த பொருள்களின் படங்களும் செயல்களின் படங்களுமாகவே இருந்தன. பின்பு அவன் தன் மனத்தில் தோன்றிய கருத்துக்களின் படங்களை வரையறுக்கப் பெற்ற தனித்தனி ஓசைகளாக வெளியிடத் தொடங்கினன். அத்தகைய ஓசைகள் ஒன்றுகூடி மனிதனுடைய ஒரு சிந்தனையையோ பல சிந்தனைகளையோ வெளியிடத் தொடங்கின. அவ்வாறு மனிதனுடைய சிந்தனைகளை வெளியிடுகின்ற வரையறுக்கப் பெற்ற ஓசைகளுக்கு மொழி அல்லது பாஷை என்னும் பெயர் ஏற்பட்டது. மனிதன், முதன் முதலில், தான் பேசி வந்த பாஷையை வரிவடிவில் அமைக்கத் தொடங்கியபொழுது பலவிதமான ஒலிவடிவங்கள் தத்தமக்குப் பொருத்தமான பொருள்களையும் செயல்களையும் காட்டும் படங்களாகவே அமைந்தன. அவ்வாறாயின் ஒரு பாஷையின் முக்கியமான இலக்ஷணங்களைக் கற்பதற்கு ஏற்ற முறை, பாஷையை மறுபடியும் சித்திரங்களாக மாற்றியபின், அச்சித்திரங்களில் இருந்து மறுபடியும் பாஷையை உண்டுபண்ணுவதேயாம். நாம் இவ்வுலகில் காண்கின்றவைகளும், செய்கின்றவைகளும், நினைக்கின்றவைகளும் சித்திரங்களேயாம். நாம் இந்தச் சித்திரங்களை ஏதோ ஒருமுறையில் அமைந்த ஒலிக்கூட்டங்களினல் வெளியிடுகிறேம். அவ்வாறு அமைந்த ஒலிக்கூட்டங்களை வரிவடிவத்திலும் அமைக்கிறேம். ஆகையால், நாம் பேசுகின்ற பாஷையின் சொற்கள் ஒன்றுகூடி எவ்வாறு நமது சிந்தனைகளை வெளியிடுகின்றன என்பதைச் சித்திரங்கள் வாயிலாகக் கற்பிக்கவேண்டும். இதர பாட புத்தகங்களில் விஷயங்களை விளக்கப் படங்கள் அவசியமாய் இருப்பது போலவே இலக்கணத்திலும் அவை அவசியமாயிருக்கின்றன. படங்களின் மூலமாக இலக்கணத்தைக் கற்பிக்கும்பொழுது

சிறுவர்கள் அந்தப் பாடத்தை விரும்பிக் கற்பதோடு, அவர்களுடைய இலக்கண ஞானம் பிரத்தியக்ஷ ஞானமாகின்றது.

தமிழ்ப் பாஷையில் நான்கு சொற்களே மிகவும் முக்கியமாய் இருக்கின்றன. அவை பெயர், வினை, இடை, உரி என்பனவாம். அவற்றுள் பெயரும் வினையும் இடையும் மிகவும் முக்கியமாகும். இந்தப் புத்தகத்தில் அம் மூன்று சொற்களையும் தழுவிய சில சுலபமான இலக்கணத் தத்துவங்கள் கொடுத்திருக்கின்றன. உபாத்தியாயர்கள் இச் சிறு இலக்கண நூலை மிகவும் பிரயோஜனமாக உபயோகிக்கலாம். இதில் கொடுத்திருக்கும் விஷயங்கள் மிகவும் சுலபமான வாக்கிய அமைப்பின் இலக்கணத்தைக் கற்பிக்கப் பெரிதும் பயன்படும். ஒவ்வொரு பாடமும் மூன்று பிரிவுகள் உடையன. முதல் பிரிவு படங்களாகும். இரண்டாவது பிரிவு படங்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளும் இலக்கணத் தத்துவங்களாம். மூன்றாவது பிரிவில் அத் தத்துவங்களை யொட்டிய பயிற்சிகளாகும். சிறுவர்கள் தாமாகவே படங்களை ஆராயும்படி அவர்களை வழி நடத்தவேண்டும். சிறுவர்களே இலக்கண விதிகளை அமைத்துக் கொள்ளவேண்டும். பின்பு வேண்டுமாயின் அவர்கள் புத்தகத்தில் கொடுத்திருக்கும் விளக்கங்களையும் விதிகளையும் படிக்கலாம். ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் கொடுத்திருக்கும் பயிற்சிகளைத் தவிர உபாத்தியாயர்கள் தாமாகவே சில பயிற்சிகளை வகுத்துக் கொடுக்கவேண்டும். புத்தகத்திலுள்ள இலக்கண விதிகளைச் சிறுவர்கள் குருட்டுப் பாடமாகப் படிக்கக் கூடாது. இலக்கணத் தத்துவங்களைச் சிறுவர்கள் அறிந்துகொண்டு தாமாகவே விதிகள் வகுக்கவேண்டும். உபாத்தியாயர்கள் இலக்கணப் பிரசங்கங்களும் வியாக்கியானங்களும் செய்யக்கூடாது. யாவற்றையும் அநுபவ முறையாகக் கற்பிக்கவேண்டும். இவ்வாறு சிறுவர்களுக்கு இலக்கணம் கற்பிக்கப்படுமாயின், இலக்கணப் பாடம் வெகு இரசமாயும் சுலபமாயும் பாஷையோடு சேர்ந்த ஒரு பாடமாயும் இருக்கும் என்பதற்குச் சந்தேகமே யில்லை.

# பொருளடக்கம்


| | | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 1. | பெயர்ச்சொல் | ... | ... | 7 |
| 2. | திணை | ... | ... | 9 |
| 3. | ஆண்பால் : பெண்பால் | | ... | 12 |
| 4. | பலர்பால் | | ... | 15 |
| 5. | ஒன்றன்பால் : பலவின்பால் | | ... | 18 |
| 6. | திணை : பால்கள் | ... | ... | 21 |
| 7. | தன்மை, முன்னிலை இடங்கள் | | ... | 24 |
| 8. | எண் : இடம் : திணை : பால் | | ... | 29 |
| 9. | எழுவாய் : பயனிலை | ... | ... | 34 |
| 10. | வேற்றுமைகள் | ... | ... | 39 |
| 11. | புணர்ச்சி | ... | ... | 45 |

# சித்திரமுறை இலக்கணம்

## முதற் புத்தகம்

### 1. பெயர்ச்சொல்

கீழே உள்ள படங்களில் நீங்கள் பார்க்கிற பொருள்கள், பிராணிகள், மனிதர்களின் பெயர்களைச் சொல்லுங்கள்.







தோட்டம், நாற்காலி, மேசை, கதவு, மரம், தென்னை முதலியவை ஒவ்வொரு பொருளின் பெயராகும். ஊர் என்பது ஒரு இடத்தின் பெயராம். குரங்கு, மயில், மீன் என்பவை பிராணிகளின் பெயர்களாம்.

வண்ணான், மனிதன், பெண், உபாத்தியாயர், மனிதர்கள், ஸ்திரீகள் முதலியன பகுத்தறிவுடையவர்களின் பெயர்களாம்.

பயிற்சி :—

1. பத்துச் சாமான்களின் பெயர்கள் எழுது.
2. ஐந்து மரங்களின் பெயர்கள் எழுது.
3. நான்கு மிருகங்களின் பெயர்கள் எழுது.
4. மூன்று பறவைகளின் பெயர்கள் எழுது.
5. நீ உன் வீட்டில் உள்ளவர்களைக் கூப்பிடுகிற பெயர்களை எழுது.

நீ எழுதின ஒவ்வொரு சொல்லும் ஏதாவது ஒரு பொருளுக்காவது, மரஞ் செடி கொடிகளுக்காவது, மிருகங்கள் பறவைகளுக்காவது அல்லது ஒரு ஆளுக்காவது பெயராக இருக்கிறதல்லவா ? அதனாலே, அந்தச் சொற்களைப் பெயர்ச் சொற்கள் என்று சொல்லுகிறோம்.

## 2. திணை

கீழே உள்ள படங்களில் காணும் பொருள்களின் பெயர்களைச் சொல்லு.



இவை யெல்லாம் உயிர் இல்லாத பொருள்களின் பெயர்களாம்.

கீழே உள்ள பிராணிகளின் பெயர்களைச் சொல்லு.



இவை யெல்லாம் உயிர் உள்ளவைகளின் பெயர்கள்.

கீழே உள்ள படங்களில் காணும் மனிதர்களின் பெயர்களைச் சொல்லு.



இவையெல்லாம் பகுத்தறிவுள்ள மனிதர்களின் பெயர்கள்.

நாற்காலி, புஸ்தகம், கதவு, பேனா, மேசை, கை, வீடு, பூ, மரம், தென்னை முதலான பொருள்களின் பெயர்களும், அணில், ஆடு, புழு, வண்ணாத்திப்பூச்சி, மீன், குரங்கு, கிளி, பசு, நாய், பூனை முதலான பிராணிகளின் பெயர்களும் ஒரு ஜாதியாகும். இந்த ஜாதியில் உள்ள

எந்தப் பொருளையும், பிராணியையும் பகுத்தறிவில்லாதவை என்று சொல்லுகிறோம்.

பையன், பெண், மனிதன், ஸ்திரீ, வண்ணான், தட்டான், இராஜா, உபாத்தியாயர், இராணி, வண்ணாத்தி என்றவர்கள் எல்லோரும் பகுத்தறிவுடையவர்கள். அவர்கள் பேசுவார்கள்; நன்மை எது, தீமை எது என்று அறிவார்கள். ஆகையால், அவர்களுக்குப் பகுத்தறிவு உண்டு.

பகுத்தறிவுள்ளவர்களை உயர்ந்த ஜாதி என்று சொல்லுவோம். அல்லது சுருக்கமாக, உயர்திணை என்போம். பகுத்தறிவில்லாதவைகளை அஃறிணை என்போம்.

பயிற்சி:—1. இந்தப் பாடத்தில் கொடுத்திருக்கிற படங்களைப் பார்த்து உயர்திணைப் பெயர்களையும் அஃறிணைப் பெயர்களையும் தனித்தனியே எழுது.

2. நீயே சொந்தமாக 10 உயர்திணைப் பெயர்களும் 10 அஃறிணைப் பெயர்களும் எழுது.

### 3. ஆண்பால் : பெண்பால்

கீழே உள்ள படங்களைக் கவனித்துப்பார். முதலில் ஆண்களையெல்லாம்பிரித்துச்சொல்லு. பின்பு பெண்களையெல்லாம் பிரித்துச் சொல்லு.



OFFICE OF THE
13
1 AUG 1933
DRAS





## ஆண்கள்.

| | | | |
|---|---|---|---|
| பையன் | மனிதன் | வண்ணான் | |
| தட்டான் | இராஜா | உபாத்தியாயர் | |
| ஸ்ரீகிருஷ்ணன் | ஸ்ரீராமன் | மகரிஷி | |
| குதிரைக்காரன் | வேடன் | குறவன் | |
| தகப்பன் | பாகன் | இடையன் | |
| கிழவன் | அம்பட்டன் | சக்கிலியன் | குசவன் |

இந்தப் பெயர்கள் எல்லாம் ஆண் இனத்தைக் குறிப்பதனால் இவை எல்லாம் ஆண்பால் பெயர்கள் என்று சொல்லப்படும். ஆண் இனத்தைக் காட்டுகிற பெயர்கள் ஆண்பால் பெயர்கள்.

## பெண்கள்.

| | | |
|---|---|---|
| பெண் | ஸ்திரீ | இராணி |
| வண்ணாத்தி | இலக்ஷ்மி | ஸரஸ்வதி |
| குறத்தி | தாய் | இடைச்சி |
| கிழவி | குசத்தி | |

இந்தப் பெயர்கள் எல்லாம் பெண் இனத்தைக் குறிப்பதனால் இவை எல்லாம் பெண்பால் பெயர்கள். பெண் இனத்தைக் காட்டுகிற பெயர்கள் பெண்பால் பெயர்களாம்.

பயிற்சி :—பத்து ஆண்பால் பெயர்கள் எழுது. பத்துப் பெண்பால் பெயர்கள் எழுது.

---

## 4. பலர்பால்

கீழ் உள்ள படங்கள் ஒவ்வொன்றிலும் இருக்கிற கூட்டங்களின் பெயர்களைச் சொல்லு.











**பலரைக் குறிக்கும் பெயர்கள்.**

| | |
|---|---|
| பிள்ளைகள் | பெண்கள் |
| மனிதர்கள் | கிழவர்கள் |
| இடையர்கள் | அரசர்கள் |
| கிழவிகள் | தட்டார்கள் |
| ஸ்திரீகள் | குறவர்கள் |

ஆண்பாலின் கூட்டத்தையாவது, பெண்பாலின் கூட்டத்தையாவது, ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்த கூட்டத்தையாவது சேர்த்துக் குறிக்கிற பெயர்களைப் பலர்பால் பெயர்கள் என்று சொல்லுவோம். பலர்பால் பெயர்கள் ஆண்பால் பெயர்களுக்கும் பெண்பால் பெயர்களுக்கும் பொதுவான பாலாகும்.

இதை வாசி.



வருகிறார்.



# வருகிறார்.

இராஜா வருகிறார்.

உபாத்தியாயர் வருகிறார்.

இந்த வாக்கியங்களில் இராஜா ஒருவர்தாம் இருக்கிறார்; உபாத்தியாயரும் ஒருவரே. என்றாலும், வருகிறார் என்று சொல்லுகிறோம். ஏனென்றால், இராஜா, உபாத்தியாயர் முதலிய சில பெயர்களை மரியாதையாக அப்படிச் சொல்லுகிறோம். அப்பெயர்களும் பலர்பாலே யாம்.

பயிற்சி :—

கீழ் உள்ள வாக்கியங்களில் கீறிட்ட பெயர்கள் என்ன பால் என்று சொல்லுங்கள்.

1. <u>பையன்</u> பாடம் படிக்கிறான்.
2. <u>தட்டான்</u> <u>இராணிக்கு</u> நகைசெய்கிறான்.
3. <u>தாய்</u> குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள்.

4. அண்ணன் தங்கையோடு பேசுகிறான்.
5. அக்காள் அவனை அடித்தாள்.
6. ஜனங்கள் ஓடுகிறார்கள்.
7. வேலைக்காரர்கள் வேலை செய்கிறார்கள்.
8. தகப்பனார் வருகிறார்.

---

**5.** ஒன்றன்பால் : பலவின்பால்

கீழே காட்டியிருக்கிற படங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள பொருள்களையும் பிராணிகளையும் சொல்லு.





## ஒன்றைக் குறிக்கும் பெயர்கள்.

| | | |
|---|---|---|
| நாற்காலி | மேசை | பூ |
| அணில் | மாடு | குரங்கு |
| வண்ணாத்திப்பூச்சி | பசு | நாய் |
| பூனை | | |

ஒன்றைக் குறிக்கும் பெயர்களை ஒன்றன்பால் என்று கூறுகிறோம். உயிருள்ளதும் உயிரில்லாததுமான பகுத்தறிவற்ற எந்த ஒரு பொருளையும், பிராணியையும் குறிக்கும் பெயரை ஒன்றன்பால் பெயர் என்று சொல்லுவோம். இதை ஒருமை என்றும் சொல்லலாம்.

## பலவற்றைக் குறிக்கும் பெயர்கள்.

| | | |
|---|---|---|
| மேசைகள் | நாற்காலிகள் | அணில்கள் |
| பூக்கள் | மாடுகள் | குரங்குகள் |
| பசுக்கள் | நாய்கள் | |
| வண்ணாத்திப்பூச்சிகள் | | பூனைகள் |

பலவற்றைக் குறிக்கும் பெயர்களைப் பலவின் பால் என்று கூறுகிறோம். உயிருள்ளவைகளும் உயிரில்லாதவைகளுமான பகுத்தறிவற்ற பல பொருள்களையும், பிராணிகளையும் குறிக்கும் பெயரைப் பலவின்பால் பெயர் என்று சொல்லுகிறோம். இதைப் பன்மை என்றும் சொல்லலாம்.

பயிற்சி :—

கீழ் உள்ள வாக்கியங்களில் ஒன்றன்பால் பெயர்களையும், பலவின்பால் பெயர்களையும் பிரித்து எடுத்து எழுது.

1. பூ பூக்கிறது.
2. நாய்கள் தெருக்களில் ஓடுகின்றன.
3. கழுதை மேய்கிறது.
4. பசு பால் கறக்கிறது.
5. பசுக்கள் பால் கறக்கின்றன.
6. மாடு மேய்கிறது.
7. பூனை பாலைக் குடித்தது.
8. மாடுகள் தோட்டத்தில் மேய்கின்றன.

## 6. திணை : பால்கள்

கீழே கொடுத்திருக்கும் படங்களின்மேல் அவற்றின் திணையையும், கீழே அவற்றின் பாலையும் எழுதுங்கள்.

☞ திணை..........................



ஓடுகிறான்.

☞ பால்..........................

☞ திணை..........................



வாசிக்கிறாள்.

☞ பால்..........................

☞ திணை..........................



வருகிறார்.

☞ பால்..........................

உயர் திணை

உயர் திணை

திணை.......................



ஓடுகிறார்கள்.

பால்...........................

திணை.......................

அஃறிணை



மேய்கிறது.

பால்...........................

திணை.......................



மேய்கின்றன.

பால்...........................

| | | |
|---|---|---|
| உயர் திணை | ஆண்பால் | பையன். |
| | பெண்பால் | பெண். |
| | பலர்பால் | உபாத்தியாயர். |
| | பலர்பால் | மனிதர்கள். |
| அஃறிணை | ஒன்றன்பால் | பசு. |
| | பலவின்பால் | மாடுகள். |

ஆண்பால், பெண்பால், பலர்பால் உயர்திணையைச் சார்ந்தவை. ஒன்றன்பாலும் பலவின்பாலும் அஃறிணையைச் சார்ந்தவை.

பயிற்சி :—

கீழே கொடுத்திருக்கும் பெயர்களுக்குத் திணை, பால் சொல்லு.

1. புலி.
2. சிங்கம்.
3. எருமைகள்.
4. மரங்கள்.
5. கண்கள்.
6. கால்கள்.
7. வண்ணான்.
8. இலக்ஷ்மி.
9. குதிரைக்காரன்.
10. சேவகன்.
11. வேலைக்காரி.
12. ஊரார்.
13. உழவர்.
14. குடியானவர்கள்.
15. பெற்றோர்கள்.
16. பண்டிதர்.

## 7. தன்மை, முன்னிலை இடங்கள்

இந்தப் படத்தைப் பார். இவன் பெயர் இராமன். இ ர ா ம ன் தன் கை விரலால் தன்னைச் சுட்டிக் காட்டுகிறான். இவன் வாயைப் பார். இவன், "நான்" என்கிறான்.



இந்தப் படத்தைப் பார். இரண்டு பையன்கள் மூன்றாவது ஒரு பையனைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். இரண்டு பையன்களில் ஒருவன் பெயர் இராமன். இன்னொரு பையன் பெயர் கிருஷ்ணன். எதிரே நிற்பவன் பெயர் முத்து. இராமனும் கிருஷ்ணனும் தங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டே முத்துவைப் பார்த்து, "நாங்கள்" என்கிறார்கள்.



172984

இந்தப் படத்தைப் பார். இராமனும்



கிருஷ்ணனும் முத்துவையும் சேர்த்துக் கொண்டு, "நாம்" என்று சொல்லுகிறார்கள்.

---

"நான்" என்பவன் தன்னைக் குறித்துப் பேசுவான்.

"நாங்கள்" என்பவர்கள் எதிரிலுள்ளவரை விட்டுத் தங்களைக் குறித்தே பேசுவார்கள்.

"நாம்" என்பவர்கள் முன்னே நிற்பவரையும் சேர்த்துக்கொண்டு பேசுவார்கள்.

---

இந்தப் படத்தைப் பார். இடது கைப்



பக்கத்தில் இராமன் நிற்கிறான். வலது கைப் பக்கத்தில் கிருஷ்ணன் இராமனுக்கு எதிராக நிற்கிறான். இராமன் தன் முன் நிற்கும் கிருஷ்ணனைச் சுட்டிக் காட்டி, "நீ" என்கிறான்.



இந்தப் படத்தைப்பார். இடதுகைப் பக்கத்தில் இராமன் நிற்கிறான். வலது கைப் பக்கத்தில் இராமனுடைய உபாத்தியாயர் நிற்கிறார். இராமன் தன் முன் நிற்கும் உபாத்தியாயரைச் சுட்டிக் காட்டி, "நீர்" என்கிறான்.

---



இந்தப் படத்தைப் பார். இடது கைப் பக்கத்தில் இராமன் நிற்கிறான். வலது கைப் பக்கத்தில் இராமனுக்கு எதிராக உபாத்தியாயரும் சில பிள்ளைகளும் நிற்கிறார்கள். இராமன் தன் முன் நிற்கும் உபாத்தியாயரையும், பிள்ளைகளையும் சுட்டிக் காட்டி, "நீங்கள்" என்கிறான்.

ஒருவன் தன முன் நிற்கும் ஒருவனை "நீ" என்று குறிப்பிடுவான்.

ஒருவன் தன் முன் நிற்கும் ஒருவரை மரியாதையாக "நீர்" என்று குறிப்பிடுவான்.

ஒருவன் தன் முன் நிற்கும் பலரையும், ஒன்ருய் "நீங்கள்" என்று குறிப்பிடுவான்.

"நான்" என்பது தன்னைக் குறித்துப் பேசுகிறதினுல் அது தன்மை இடத்தில் நிற்கிற பெயர்.

"நாங்கள்" என்பது எதிரே நிற்கிறவர்களை நீக்கித் தங்களை மட்டும் குறித்துப் பேசுவதினுல் அதுவும் தன்மை இடத்தில் நிற்கிற பெயர்.

"நாம்" என்பது தங்களைக் குறித்துப் பேசுவதினுல் அதுவும் தன்மை இடத்தில் நிற்கிற பெயர்.

"நீ" என்பது முன் நிலையில் நிற்கிற ஒரு பொருளையோ, ஒரு ஆளையோ குறித்துப் பேசுகிறதினுல் அது முன்னிலை இடத்தில் நிற்கிற பெயர்.

"நீர்" என்பது முன் நிலையில் நிற்கிற ஒரு வரை மரியாதையாகக் குறிப்பிட்டுப் பேசுகிறதினால் அதுவும் முன்னிலை இடத்தில் நிற்கிற பெயர்.

"நீங்கள்" என்பது முன் நிலையில் நிற்கிற ஜனங்களையோ, பொருள்களையோ ஒன்றாய்க் குறிப்பிட்டுப் பேசுகிறதினால் அதுவும் முன்னிலை இடத்தில் நிற்கிற பெயர்.

பயிற்சி :—

(1) தன்மை இடத்துப் பெயர்களைச் சொல்லு.

(2) முன்னிலை இடத்துப் பெயர்களைச் சொல்லு.

(3) தன்மை இடத்துப் பெயர்கள் வரும்படி மூன்று வாக்கியங்கள் எழுது.

(4) முன்னிலை இடத்துப் பெயர்கள் வரும்படி மூன்று வாக்கியங்கள் எழுது.

## 8. எண் : இடம் : திணை : பால்



இவன், "நான்" என்கிருன். "நான்" என்று தன்னை மட்டும் காட்டுகிருன். "நான்" என்பது ஒன்று ஆகையால் "நான்" என்பது ஒருமைப் பெயர்.



இவர்கள், "நாம்" என்கிருர்கள். "நாம்" என்று தங்கள் எல்லோரையும் காட்டுகிருர்கள். "நாம்" என்பது பலர். ஆகையால் "நாம்" என்பது பன்மைப் பெயர்.

இவர்கள், "நாங்கள்" என்கிருர்கள். "நாங்கள்" என்று எதிரில் நிற்கிறவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் தங்களை மட்டும் காட்டுகிருர்கள். "நாங்கள்" என்பது பலர். ஆகையால் "நாங்கள்" என்பது பன்மைப் பெயர்.



கமலம், இராமனைச் சுட்டிக் காட்டி "நீ" என்கிறாள். அவள் முன் இராமன் ஒருவன்தான் நிற்கிறான். "நீ" என்பது ஒன்று. ஆகையால் "நீ" என்பது ஒருமைப் பெயர்.



---

இராமன் முன் உபாத்தியாயர் நிற்கிறார். இராமன் முன் நிற்கிற உபாத்தியாயர் ஒருவர் தான்; என்றாலும், இராமன் அவரை "நீர்" என்கிறான். "நீர்" என்பது ஒருவரைப் பலராகச் சொல்லுகிறது. ஆகையால் "நீர்" என்பது பன்மைப் பெயர்.



---

இராமன் தன்முன் நிற்கிற உபாத்தியாயரையும் பிள்ளைகளையும் "நீங்கள்" என்கிறான். இராமன் முன் நிற்கிறவர்கள் பலர். "நீங்கள்" என்பது பலரைக் குறிக்கின்றது. ஆகையால் "நீங்கள்" என்பது பன்மைப் பெயர்.



| | | |
|---|---|---|
| **தன்மை இடம்** | ஒருமை | நான் |
| | பன்மை | நாம்<br>நாங்கள் |

நான்————தன்மை ஒருமை

நாம்————தன்மைப் பன்மை

நாங்கள்————தன்மைப் பன்மை.

| | | |
|---|---|---|
| **முன்னிலை இடம்** | ஒருமை | நீ |
| | பன்மை | நீர்<br>நீங்கள் |

நீ————முன்னிலை ஒருமை

நீர்————முன்னிலைப் பன்மை

நீங்கள்————முன்னிலைப் பன்மை.

ஒருமை என்பதை ஒருமை எண் என்றும், பன்மை என்பதைப் பன்மை எண் என்றும் கூறலாம். ஒருமையும் பன்மையும், பொருள்களையும் பிராணிகளையும் ஆட்களையும் எண்ணிக் காட்டுகின்றன. ஆகையால், அவை எண்கள் எனப்படும்.

தன்மை இடத்துப் பெயர்களையும் முன்னிலை இடத்துப் பெயர்களையும் தவிர மற்றெல்லாப் பெயர்களும் படர்க்கை இடத்துப் பெயர்களாம். படர்க்கை இடத்துப் பெயர்களுக்குத் தான் திணையும் பாலும் சொல்லவேண்டும்.

கீழே மூன்று இடங்களிலும் வருகிற பெயர்களை வகுத்துக் காட்டியிருக்கிறது.

## 1. தன்மை இடம்

| | |
|---|---|
| ஒருமை | நான் |
| பன்மை | { நாம்<br>நாங்கள் |

## 2. முன்னிலை இடம்

| | |
|---|---|
| ஒருமை | நீ |
| பன்மை | { நீர்<br>நீங்கள் |

## 3. படர்க்கை இடம்

உயர் திணை.

ஆண்பால்—-— அவன்
பெண்பால்—— அவள்
பலர்பால்——— அவர்* அவர்கள்

* அவர் என்பதை மரியாதையாக ஒருவருக்கு மட்டும் உபயோகிக்கிறோம்.

# படர்க்கை இடம்

## அஃறிணை

| | |
|---|---|
| ஒன்றன்பால் | அது |
| பலவின்பால் | அவை : அவைகள் |

பயிற்சி :—

(1) படர்க்கை இடத்தில் வரும் வேறு பெயர்கள் சொல்லு.

(2) படர்க்கை இடத்தில் இதற்குமுன் படித்த பெயர்களிற் சில சொல்லு.

(3) தன்மை, முன்னிலை, படர்க்கை மூன் றிடத்திற்கும் வித்தியாசம் என்ன ?

(4) கீழே கொடுத்திருக்கும் வார்த்தைகளுக் குத் திணை, பால், இடம், எண் வகுத்துக் காட்டு.

(1) ஒருவன். (2) ஒருத்தி. (3) எவன். (4) எவர். (5) எவள். (6) மகன். (7) மகள். (8) மாமன். (9) மாமி. (10) எது. (11) இது. (12) இவை. (13) முருகன். (14) முருகர். (15) நான். (16) நீங்கள்.

## 9. எழுவாய் : பயனிலை

கீழ் உள்ள வாக்கியங்களை வாசி.



உழுகிறான்



ஓடுகிறாள்



வருகிறார்



ஓடுகிறார்கள்



மேய்கிறது



மேய்கின்றன

---

கீழே கொடுத்திருக்கும் கேள்விகளுக்கு விடை கூறு.

---

யார் உழுகிறான்?



---

யார் ஓடுகிறாள்?



யார் வருகிறார்?



---

யார் ஓடுகிறார்கள்?



---

எது
மேய்கிறது?



---

எவை
மேய்கின்றன?



நீங்கள் படித்த வாக்கியங்களில் காரியம் செய்கிறவர்கள் எழுவாய். அவர்கள் செய்கிற காரியம் பயனிலை.

| காரியம் செய்கிறவர்கள் | அவர்கள் செய்யும் காரியம் |
|---|---|
| <u>எழுவாய்.</u> | <u>பயனிலை.</u> |
| உழவன் | உழுகிறான். |
| பெண் | ஓடுகிறாள். |
| அப்பா | வருகிறார். |
| மனிதர்கள் | ஓடுகிறார்கள். |
| பசு | மேய்கிறது. |
| மாடுகள் | மேய்கின்றன. |

பயிற்சி :—

1. கீழே உள்ள வாக்கியங்களில் எழுவாய் களுக்குப் பயனிலை கூட்டி வாசி.

| காரியம் செய்கிறவர்கள் | | செய்கிற காரியம் |
|---|---|---|
| எழுவாய். | | பயனிலை. |
| வேலைக்காரன் | வேலை | ———————— |
| அக்காள் | பாடம் | ———————— |
| மாமனார் | சாதம் | ———————— |
| பையன்கள் | பந்து | ———————— |
| பூனை | எலியை | ———————— |
| பட்சிகள் | உயர | ———————— |

2. கீழே உள்ள வாக்கியங்களில் பயனி லைக்கு ஏற்ற எழுவாய் அமை.

———————— பாட்டுப் பாடுகிறாள்.
———————— பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்.
———————— சட்டி பண்ணுகிறான்.
———————— ஊருக்குப் போகிறார்கள்.
———————— பாலைக் குடிக்கிறது.
———————— புல்லை மேய்கின்றன.

# 10. வேற்றுமைகள்

கீழே ஒவ்வொரு படத்திற்கும் எதிரே சில வாக்கியங்கள் கொடுத்திருக்கின்றன. அந்த வாக்கியங்களின் பொருள் சரியாக விளங்க வேண்டுமானால் அவற்றில் சில வார்த்தைகளை மற்ற வார்த்தைகளோடு சம்பந்தப்படுத்திக் காட்டவேண்டும். எங்கே எல்லாம் சம்பந்தம் மறைந்து இருக்கிறதோ அங்கே எல்லாம் ஒரு கோடு போட்டுக் காட்டி இருக்கிறது. கோடு போட்டிருக்கிற இடங்களில் சரியான உருபுகளை அமைத்து வார்த்தைகளைச் சம்பந்தப் படுத்திக் காட்டுங்கள்.

---



உழவன் நில—

உழுகிறான்.

உழவன் மாட்—

அடிக்கிறான்.

மாடு கலப்பை—

இழுக்கிறது.

---



அக்காள் கை—

எழுதுகிறாள்.

அக்காள் பேனா—

எழுதுகிறாள்.



தாய் குழந்தை—

விளையாடுகிருள்.

குழந்தை தாய்—

விளையாடுகிறது.



பசு—க் கால்கள் நான்கு.

பசு—க்கொம்புகள் இரண்டு.

பசு— வால் ஒன்று.



இராஜா அரண்மனை—

வெளியே போகிருர்.



மாடுகள் வீட்—

வருகின்றன.



புலியி—தோல் இது.

புலியி—நகம் இது.



குரங்குகள்
காட்.— வசிக்கின்றன.
குரங்குகள்
மர— ஏறுகின்றன.
குரங்குகள் மர—
விளையாடுகின்றன.

---



ரோஜாச் செ— பூ
பூக்கிறது.

---



தாயார் சமையல்

அறை—சமைக்கிறுள்.

---

 

குழந்தை, அம்—என்று

கூப்பிடுகிறது.

நீங்கள் பூர்த்தி செய்த வார்த்தைகள் :—

2. நிலம் + அத்து + ஐ = நிலத்தை
மாடு + ஐ = மாட்டை
கலப்பை + ஐ = கலப்பையை

3. கை + ஆல் = கையால்
பேனு + ஆல் = பேனுவால்
குழந்தை + ஒடு = குழந்தையோடு
தாய் + ஒடு = தாயோடு

4. பசு + கு = பசுவுக்கு

5. அரண்மனை + இலிருந்து = அரண்மனையிலிருந்து
வீடு + நின்று = வீட்டினின்று

6. புலி + உடைய = புலியினுடைய

7. காடு + இல் = காட்டில்
மரம் + இல் = மரத்தில்
செடி + இல் = செடியில்
அறை + இல் = அறையில்

8. அம்மை + ஆ = அம்மா

ஒவ்வொரு பெயர்ச் சொல்லோடும் கூட்டினவைகள் உருபுகள் எனப்படும். இந்த

உருபுகள் சொற்களுக்குள்ள வித்தியாசங்களைக் காட்டிச் சம்பந்தப்படுத்தும். எழுவாய்களுக்கு உருபுகள் இல்லை. எழுவாயை முதல் வேற்றுமை என்றும் சொல்லலாம்.

| | | | |
|---|---|---|---|
| ஐ | உருபு | 2-ம் | வேற்றுமைக்கு வரும். |
| ஆல், ஒடு | ,, | 3-ம் | ,, |
| கு | ,, | 4-ம் | ,, |
| இலிருந்து, இனின்று | ,, | 5-ம் | ,, |
| உடைய | ,, | 6-ம் | ,, |
| இல் | ,, | 7-ம் | ,, |
| ஆ | ,, | 8-ம் | ,, |

எட்டாம் வேற்றுமைக்கு ஏ என்ற உருபும் உண்டு. எட்டாம் வேற்றுமை மற்ற வார்த்தைகளோடு சம்பந்தப்படாமல் தனித்து நிற்கும். அதை விளி வேற்றுமை என்றும் சொல்லலாம்.

பயிற்சி :—

I. கீழ் உள்ள பெயர்ச் சொற்களுக்கு எட்டு வேற்றுமை உருபுகளையும் கூட்டி எழுதுங்கள்.

ஆறு, மனிதன், கண், பசு, மரம், காடு, கதவு, பந்து, நான், நாம் நாங்கள், நீ, நீர் நீங்கள்.

II. கீழ் உள்ள வாக்கியங்களில் கீறிட்ட இடங்களில் ஏற்ற உருபுகளை அமையுங்கள்.

1. தந்தை——சொல்——மீறுத இராமன்.

2. அரசன் கோயி——க் கட்டினான்.

3. மலை——விழுகிற அருவி.

4. செடிகள் தோட்ட—இருக்கின்றன.

5. அண்——! வா.

6. <u>நான்</u> ஐந்து ரூபாய் வேண்டும்.

7. நான் <u>நீ</u> கண்டேன்.

# 11. புணர்ச்சி

## இரண்டாம் வேற்றுமை.

க்

இராமனை — கண்டேன்

## நான்காம் வேற்றுமை.

க்

இராமனுக்கு — கொடுத்தேன்

1. இரண்டாம் வேற்றுமை உருபை உடைய வார்த்தைகளோடு க், ச், த், ப் என்ற ஓசைகளை முதலில் கொண்டுவரும் வார்த்தைகள் வந்து மோதும்பொழுது, மோதுகிற வார்த்தையின் முதலோசை இரட்டிக்கும்.

2. அப்படியே நான்காம் வேற்றுமையிலும் இரட்டிக்கும்.

## இரண்டாம் வேற்றுமை : உதாரணம்.

1. வீட்டை + கட்டினான் = வீட்டைக் கட்டினான்.

2. பணத்தை+செலுத்தினான்=பணத்தைச் செலுத்தினான்.

3. பழத்தை + தின்றான் = பழத்தைத் தின்றான்.

4. படத்தை + பார்த்தான் = படத்தைப் பார்த்தான்.

## நான்காம் வேற்றுமை : உதாரணம்.

1. வேலைக்கு + கூலி = வேலைக்குக் கூலி.

2. பள்ளிக்கூடத்திற்கு + சென்றான் = பள்ளிக்கூடத்திற்குச் சென்றான்.

3. வீட்டிற்கு + தெற்கே = வீட்டிற்குத் தெற்கே.

4. கோவிலுக்கு + போனான் = கோவிலுக்குப் போனான்.

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

# பால போதினி

(படங்கள் அடங்கியுள்ளவை)

துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்தது.

பால பாடசாலைகளின் விரிவான பாடத்திட்டத்தின்படி

ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்காக

ஸ்ரீமதி லலிதா தேவி எழுதியது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-ம் புஸ்தகம் | அணா | 2½ | 3-ம் புஸ்தகம் | அணா | 4 |
| 2-ம் ,, | ,, | 3 | 4-ம் ,, | ,, | 5 |

5-ம் புஸ்தகம் அணா 6

---

## பாலர் சுக நூல்—அணா 4

(சித்திரப்படங்கள் அடங்கியவை)

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

### முதற்பாகம்: சுகவிதிகள்

(1) தேக சௌக்கியம், (2) தேக சுத்தம், (3) ஸ்நானம், (4) ஆடை, (5) ஆகாரம், (6) பானம், (7) சுவாசித்தல். (8) விளையாடல், (9) நித்திரை, (10) நிற்க, நடக்க, உட்கார விதிகள், (11) மல ஜலங்கள், (12) வீடு, (13) நீர் நிலைகள், (14) ஈக்களும், கொசுக்களும், (15) நல்லொழுக்கம்.

### இரண்டாம் பாகம்: தொத்து வியாதிகள்

(1) சொறி, சிரங்கு, (2) கண்ணோய், (3) நரம்புச் சிலந்தி, (4) கொக்கிப்புழு நோய், (5) போய்த் திரும்பி வரும் (ரிலாப்ஸ்) ஜுரம், (6) இன்புளுயென்ஸா ஜுரம், (7) மலேரியா ஜுரம், (8) வாந்திபேதி (காலரா), (9) பிளேக் வியாதி, (10) வைசூரி, (11) சுகாதார உத்தியோகஸ்தர்கள், (12) வைத்தியசாலைகள்.

# கோகலே தமிழ் வாசக புத்தகங்கள்

**Edited by**

P. T. ஸ்ரீநிவாஸய்யங்கார், M. A., L. T.

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது)

தேசாபிமானமே முக்கியக் கொள்கையாகக்கொண்டு தேச ஊழியத்திற்காகக் கழகம் ஏற்படுத்தி, பொருளாசையின்றி வாழ்ந்த **கோபால கிருஷ்ண கோகலே** அவர்கள் பெயர் அமைத்து, பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர்களுக்காக இவ்வாசக புஸ்தகமாலை வெளியிடப்பட்டிருக்கிறது.

சென்னை சர்வகலா சங்கத்தின் இந்திய தேசச் சரித்திர ஆராய்ச்சியாளரும், நமது தமிழ் நாட்டில் கல்வித்துறை பலவற்றிலும் ஈடுபட்டு உழைத்துப் பல நூல்கள் இயற்றி வருபவருமாகிய ஸ்ரீமான் **P. T. ஸ்ரீநிவாச ஐய்யங்கார்** அவர்களது மனங்கனிந்த உதவியைக் கொண்டு படிப்பு முறைகளைப்பற்றிப் புதிதாய் ஏற்பட்டிருக்கும் கொள்கைகளை முன்னிட்டு இப்புஸ்தகங்கள் தொகுக்கப்பெற்றன.

நம் நாட்டு மக்களுக்கு இன்றியமையாத கல்வி அறிவு, உலக அறிவு, உலக நீதி, இயற்கைப் பொருள்களைப்பற்றிய அறிவு, செயற்கைப் பொருள்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயங்கள் முதலியன இளமைதொட்டே நமது சிறுவர்களுக்குப் புகட்டப்பெறின், இவைகள் இளமனதில் பசுமரத்தாணிபோல் நன்கு பதியக்கூடும். ஆகையால், இளையோர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், தேசாபிமானம் முதலியன உண்டாவதற்கு ஏற்றபடி "பழையன கழிதல் புதியன புகுதல்" என்ற காலமுறையில் சித்திரப் படங்களோடு கூடிய இனிய கதைகளும், பழையனவும் புதியனவுமான பாடல்களும், பல விஷயங்களைப் படிப்படியாக வருத்தங்காட்டாது சிறுகச் சிறுகப்போதிக்கும் பாகுபாடு பொருந்திய பாடங்களும், சாதுரியமாகப் பேசுந்திறனை யளிக்கும் சம்பாஷணைகளும், தமிழ் வளமுறுத்தும் சொல்லமைதிகளோடும் கூடிய பொருட்டிறனும், நீதி புகட்டும் பழமொழிகளும், கடின மொழிகளுக்குப் பொருளும், பயிற்சிகளும், வியாசமுறையை விருத்தி செய்வதற்குதவும் வினைகளும், கதை சொல்லப் பழக்கும் முறையில் நின்ற கதைகளும், இக் **கோகலே வாசகத்தில்** இனிமையோடு திகழ்ந்து விளங்குவனவாம். அன்றியும், நம்மாணவர் மனதில் நன்கு வேரூன்றும் பொருட்டு நடித்துக்காட்டத்தகும் அபிநய மொழிகள், அபிநயப் பாட்டுகள் நிறைந்த நாடகங்களும் விரவியுள்ளன.

| | | |
|---|---|---|
| 2-ம் வாசகம் | அணா | 3 |
| 3-ம் ,, | ,, | 4 |
| 4-ம் வாசகம் | அணா | 5 |
| 5-ம் ,, | ,, | 6 |

## பள்ளிக்கூடங்களில் உபயோகப்படுத்தக் கூடிய

## தமிழ் புஸ்தகங்கள்.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| 1. | லலிதா அல்லது பொறுத்தார் பூமியாள்வார் | 4 | 0 |
| 2. | மூன்று சகோதரர்கள் அல்லது உழைப்பின் சிற[illegible] | [illegible] | 0 |
| 3. | ஷராப்கான் அல்லது குடியி[illegible] | 3 | 0 |
| 4. | கதாவாசகம் (ஷை மூன்றும் [illegible]) | 10 | 0 |
| 5. | தென்னிந்திய நீதிக் கதைகள் | 2 | 0 |
| 6. | புராண ரத்னம் | 5 | 0 |
| 7. | ஹரிச்சந்திரன் | 12 | 0 |
| 8. | இளைஞருக்குரிய நல்வழிப்பாக்கள் | 1 | 0 |
| 9. | ,, சுகவழிப்பாக்கள் | 1 | 6 |
| 10. | வியாசமஞ்சரி—பி. தி. ஸ்ரீநிவாஸய்யங்கார் | 7 | 0 |
| 11. | பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரம்—வரகவி திரு. A. சுப்ரமண்ய பாரதியார் | 7 | 0 |
| 12. | பால பாலிகா ரகுவம்சம்—பிரம்மஸ்ரீ பருத்தியூர் K. கல்யாணராம சாஸ்திரிகள், B.A. | 3 | 0 |
| 13. | வித்யாமுறை கைபழக்கம் அல்லது கைகண் பயிற்சி (காகித அட்டைவேலை) | 2 | 6 |
| 14. | கிராமப் பஞ்சாயத்து | 4 | 0 |
| 15. | சோழநாட்டுச் சரித்திரக் கதைகள்—பி. தி. ஸ்ரீ. | 4 | 0 |
| 16. | இந்திய சரித்திரக் கதைகள் ,, | 5 | 0 |
| 17. | இந்தியர் சரித்திரம் (I Form) ,, | 7 | 0 |
| 18. | பாபா எண்சுவடி வாய்பாடு ,, | 1 | 0 |

## நூதன முறைக் கணிதம்

நாகை - **K. S.** சுப்பிரமண்யய்யர் இயற்றியது.

| | | | |
|---|---|---|---|
| 1,2. வது வகுப்புகளுக்கு | அணா 5 | 4. வது வகுப்புக்கு | அணா 6 |
| 3. வது வகுப்புக்கு | ,, 5 | 5. வது ,, | ,, 9. |


THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.